[2013 அக்டோபர் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

18—

இலைப்புள்ளி நோய்

***32822—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டத்தில் வாழைத் தோட்டங்களில் ஏற்பட்டுள்ள இலைப்புள்ளி நோயைக் (காஞ்சாரை நோய்) கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தேனி மாவட்டத்தில் வாழைத் தோட்டங்களில் பொதுவாக அக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதங்களுக்கிடையே காஞ்சாரை நோய் எனப்படும் இலைப்புள்ளி நோயின் தாக்குதல் அதிகமாக இருக்கும். இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டுப்பாட்டு முறைகள், தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மை பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு, தற்போது நோயின் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்குக்கீழ் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், கம்பம் தொகுதியில், சின்னமனூர் ஒன்றியத்தில் 1,716 ஹெக்டரிலும், உத்தமபாளையம் ஒன்றியத்தில் 781 ஹெக்டரிலும், கம்பம் ஒன்றியத்தில் 707 ஹெக்டரிலும், ஆக மொத்தம் 3,204 ஹெக்டரில் வாழை பயிரிடப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு* Sigatoka *என்ற இலைப்புள்ளி காஞ்சாரை நோய் தாக்கப்பட்டதனால் அப்பகுதி வாழை விவசாயிகள் பெரும்*

2013 அக்டோபர் 25]

நஷ்டத்திற்கும், கஷ்டத்திற்கும், பொருளாதார இழப்பிற்கும் ஆளானார்கள். இந்த ஆண்டு அக்டோபர் மாதம் மழைக்காலம், அதையடுத்து பனிக் காலம் என்பதால், நிலத்தில் ஈரப்பதம் அதிகரிக்கின்றபோதும், காற்றில் ஈரப் பதம்–relative humidity அதிகரிக்கின்றபோதும், இந்த நோய் மிகத் தீவிரமாகப் பரவுகிறது. Spreading fastly. இந்த நோய்க்கு Mycosphaerella figensis என்பதுதான் மூல காரணியாக இருக்கின்றது. அக்டோபர் முதல் டிசம்பர் வரை இந்த நோய் தீவிரமாகப் பரவக்கூடிய வாய்ப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு முழுமையான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழை உற்பத்தியிலே தேசிய அளவில் தேனி மாவட்டம்தான் முன்னோடியாக இருக்கின்றது. தேனி மாவட்டத்தில் சுமார் 5,965 ஹெக்டேர் பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அதில் 2,800 ஹெக்டேரில் “ரொபஸ்டாவும்”, 3,165 ஹெக்டேரில் “கிராண்ட் நைன்” திசு வாழையும் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த 2012–2013 ஆம் ஆண்டு தேனி மாவட்டத்தில், சுமார் 642 ஹெக்டேர் வாழைப் பயிர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டது. அப்போது விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேனி, கம்பம், உத்தமபாளையம், பெரியகுளம், போடி மற்றும் சின்னமனூர் ஆகிய இடங்களில் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து முகாம்கள் நடத்தப்பட்டன. மேலும், கிராம, வட்டார, மாவட்ட அளவில் நடத்தப்பட்ட கூட்டங்களில் இந்நோய் குறித்து விவசாயிகளின் சந்தேகங்களுக்கு உரிய பரிந்துரைகளும், வழிமுறைகளும் வழங்கப்பட்டதால், நோய் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டது. எனவே, இனி வரும் காலங்களிலும் காஞ்சாரை நோய் தாக்குதல் தொடர்பாக தோட்டக்கலை துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகளும் சேர்ந்து பல்வேறு நோய் கட்டுப்பாடு சிறப்பு முகாம்களை நடத்தி, இந்த நோயினைத் தடுத்திட தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதனால், இந்த நோய் நடப்பு ஆண்டில் பொருளாதாரச் சேத நிலையைக்

கடக்காது, கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, மழைக் காலமும், பனிக் காலமும் சேர்ந்து வருகின்ற காரணத்தினால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விவசாயிகளுக்கு Trichoderma viride மற்றும் Pseudomonas என்கின்ற Bio–Agent–களையும், நோய் அறிகுறி தென்பட்டால் Copper Oxychloride, Bavistin, Tilt, Preventor பூஞ்சை காளான் போன்ற மருந்துகளையும் இலவசமாகத் தந்து உதவவேண்டும். தேனி மாவட்டத்தில் தி.மு.க. ஆட்சியில், ஒடைப்பட்டி கிராமத்தில் 2 ஏக்கர் நிலத்தில் திராட்சை சேமிப்பு குளிர்பதன கிட்டங்கி கட்டப்பட்டது. அது இன்னும் செயல்பாட்டிற்கு வரவில்லை. அதையும் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோயின் தாக்குதல் பல வழிகளில் இருக்கிறது. குறிப்பாக களைகள் அதிகமாக இருந்தால், இந்த நோய் தாக்குதல் ஏற்படும். வடிகால் வசதி இல்லாமல் இருந்தாலும்கூட இந்த நோய் தாக்குதல் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதேபோன்று, வெப்ப நிலை 23 டிகிரி முதல் 25 டிகிரி சென்டிகிரேடாகவும், காற்றின் ஈரப்பதம் 40%–க்கு மேலாக இருப்பதும் இந்த நோயின் தாக்குதலுக்கு காரணமாக அமைகிறது. மழை மற்றும் பனிக் காலங்களில் இந்த நோய் தாக்குதல் அதிகமாக இருக்கும். அதனால், இந்தத் தாக்குதலுக்கு ஒரு காரணம் என்று இல்லை. பல காரணங்கள் இருக்கின்றன. எனவே, நம்முடைய துறை அலுவலர்களையும், வேளாண் விஞ்ஞானிகளையும் அனுப்பி, இந்நோயை உடனடியாகத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ஆண்டு அந்த நோய் தாக்குதல் அதிகமாக இருப்பின், அதற்கான உதவிகள் அனைத்தும் செய்யப்படும் என்பதையும்

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் செவ்வாழை, நேந்திரன், மட்டி போன்ற அரிய வகை வாழைகள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த வகைகள் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதில்லை. இந்த வாழையில், குறிப்பாக சில வகை நோய்கள் தென்படுகின்றன. இதனுடைய samples–ஐ நாங்கள் ஆய்வு செய்வதற்காக திருச்சிக்குத்தான் எடுத்துச் செல்லவேண்டி இருக்கிறது. எங்கள் மாவட்டத்திலேயே வாழை ஆராய்ச்சி மையம் உருவாக்கப்பட்டால், அந்த வாழை விவசாயிகளுக்கு அருகிலேயே ஒரு தீர்வு கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. தோட்டக்கலை மையத்தில் இதற்குண்டான வசதிகள் இல்லை. ஆகையால், இதற்கென்று தனியாக ஒரு வாழை ஆராய்ச்சி மையத்தை கன்னியாகுமரி மாவட்டத்தில் உருவாக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று அரசை தங்கள்வாயிலாக கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாட்டில் ஆராய்ச்சி மையங்கள் அதிகளவில் இருப்பதால், அந்த ஆராய்ச்சி மையங்களை கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ளலாம். எனினும், அதற்கான அவசியம், தேவை இருப்பின், பிற்காலத்தில் அதுபற்றிப் பரிசீலக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*